# JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU
## CC No.366/2025

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Lw2 /Pw1 |
| Name | : Ramesh |
| Father/Husband's Name | : Ellappan |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Age | : 38 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 05.03.2026.

**Accused present.**

**முதல் விசாரணை:**

நான் தற்போது படாளம் காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 14.04.2022 ம் தேதி பகல் 2.00 மணியளவில் நான் செங்கல்பட்டு தாலுக்கா காவல்நிலையத்தில் 2ம் நிலை காவலராக பணியிலிருந்தபோது, ரோந்து பணியாக நானும், உதவி ஆய்வாளர் சங்கர், ராஜீ தலைமை காவலர் ஆகியோர்களுடன் ரோந்து பணியாக மதுவிலக்கு மற்றும் கஞ்சா வேட்டையாக பிவி களத்தூர், இடத்தை கண்காணித்து சென்று போது, மேற்சொன்ன உதவி ஆய்வாளர் அவர்களுக்கு ரகசிய தகவல் கிடைத்ததின் பேரில், பகல் 2 மணியளவில் சோதனைக்கான உபகரணங்களை எடுத்து கொண்டு, பிவி களத்தூர் ரயில் நிலையம் அருகே கண்காணித்த போது, ஒரு ஆண் நபர் சந்தேகத்திற்கு இடமாக நின்று கொண்டிருந்தவரை என்னை பார்த்தவுடன் ஓட முயற்சித்தவரை நாங்கள் மடக்கி பிடித்து விசாரித்த போது, முன்னுக்கு பின் முரணாக கூறியவரை பின்னர் தன் பெயர் கணேசன் த.பெ. மணி என்றும், புதுபாக்கத்தை சேர்ந்தவர் என்று கூறியவரை தற்போது நீதிமன்ற ஆஜரில் இருக்கும் எதிரியை பிடித்து விசாரணை செய்தோம். பின்னர், மேற்படி, ஆஜர் எதிரியிடம் உதவி ஆய்வாளர் உங்களை சோதனை செய்வதற்கு சாட்சிகளாக குற்றவியல் நீதித்துறை நடுவர் அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர் முன் சோதனை செய்வதற்கு தேவையா என்று கேட்டபோது, அதற்கு எவ்வித

ஆட்சேபணையும் தெரிவிக்காமல் நீங்களே சோதனை செய்யும்படி அனுமதி கொடுத்ததின் பேரில், உதவி ஆய்வாளர் எதிரி கணேசன் என்பவரை சோதனை செய்த போது, அவர் சட்டை பையில் வைத்திருந்த எடை போட்டு பார்த்தபோது, 50 கிராம் அளவு கொண்ட கஞ்சாவை பச்சை நிறத்தில் ஒருவித நெடியுடன் கூடிய துர்வாசத்தில் இருந்ததை குறித்து கேட்டபோது, அரசால் தடை செய்யப்பட்ட கஞ்சாவை விற்பதற்காக வைத்திருப்பதாக சொன்னார். அப்போது உதவி ஆய்வாளர் உரிய காரணம் கூறி, ஆஜர் எதிரியை கைது செய்தபோது, எதிரி தான் வைத்திருந்த 50 கிராம் கஞ்சாவை உதவி ஆய்வாளர் அவர்களிடம் எடுத்து கொடுக்க, அதை கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றினார். அதற்கு நானும், தலைமை காவலர் ராஜீ என்பவரும் சாட்சிகளாக இருந்து கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான். எனது கையெழுத்துடன் கூடிய கைப்பற்றுதல் மகசர் **அதசா.ஆ1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர், எதிரி மற்றும் வழக்கு சொத்துகளுடன் நிலையம் சேர்ந்து, எதிரியின் மீது NDPS சட்டத்தின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். வழக்கு சம்பந்தமாக உதவி ஆய்வாளர் விசாரணை செய்தார்.

**குறுக்கு விசாரணை இல்லை.**

**மறு விசாரணை இல்லை.**

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

sd/- S.Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu.